# திருக்குறள்

1. அகர முதல எழுத் தெல்லாம்
   ஆதிபகவன் முதற்றே உலகு.

2. கற்க கசடற கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக.

3. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
   அன்றே மறப்பது நன்று.

4. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
   நாவினால் சுட்ட வடு.

5. முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
   இன்மை புகுத்தி விடும்.